# 7

# சிலுவையிலிருந்து ஏழு வார்த்தைகள்

Seven Sayings from the Cross

சிலுவையிலிருந்து கிறிஸ்து மொழிந்த ஏழு வார்த்தைகளின்மீது ஏராளம் பிரசங்கங்கள் உண்டு. இதோ இன்னொன்று —

### *1. பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமலிருக்கிறார்களே!* (லூக் 23:34)

சிலுவையானது ஒப்புரவாகுதலின் சின்னம்.
தேவன் ↔ மனிதன் / மனிதன் ↔ மனிதன்

மன்னிப்பு இன்றி ஒப்புரவாகுதல் இல்லை.

கர்த்தரது ஜெபத்திற்கு அடுத்த முதல் போதனை —
மத் 6:14,15 … *மன்னியுங்கள் …*

காணிக்கை செலுத்துமுன் செய்யவேண்டிய முதல் காரியம் —
மத் 5:23,24 … *முதலாவது ஒப்புரவாகி, பின்பு …*

உங்கள் சகோதரன்/சகோதரியை மன்னியுங்கள்.
உங்கள் கணவர்/மனைவியை மன்னியுங்கள்.
உங்கள் இனத்தார்/அயலகத்தாரை மன்னியுங்கள்.
உங்கள் நண்பர்/உடன் ஊழியரை மன்னியுங்கள்.

நேசிக்கப்பட முடியாதோரை நேசிக்க உணரவேண்டியவை —

- நேசிக்கப்படமுடியாத உங்களைத் தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார்!
- அடுத்த நபரைத் தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார்!
- வாழ்வு குறுகியது— வைராக்கியத்தை வைத்திருந்து பயனென்ன?

### *2. இன்று என்னுடன் பரதீசில் இருப்பாயென்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்!* (லூக் 23:43)

''இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்'' என்று சொல்லமுடியுமா? **ஆம்!**
அப் 2:47 … இரட்சிக்கப்படுவோர் *சபையில் சேர்க்கப்பட்டனர்.*
அப் 16:30,34 … சிறையதிகாரி *இரட்சிக்கப்பட்டு மகிழ்ந்தான்.*
லூக் 19:9,10 … சகேயு … *இன்றைக்கு இரட்சிப்பு*



முக்கால இரட்சிப்பு —

அ) கடந்த காலம் … பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை
ஆ) நிகழ்காலம் … பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை
இ) எதிர்காலம் … பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* விடுதலை

இரட்சிக்கப்படுவது எப்படி —

நீங்கள் ஒரு பாவி என்று உணருங்கள்.
பிதாவாகிய தேவனிடம் மனந்திரும்பி வாருங்கள்.
கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள்.
இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளையென அகமகிழுங்கள்.

காலம் தாழ்த்தாதீர்! சிலுவைக் கள்ளனை மேற்கோள் காட்டாதீர்!

*இன்றே இரட்சிப்பின் நாள்* (2 கொரி 6:2)
*அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும்* … (நீதி 29:1)

### *3. அம்மா, இதோ உன் மகன் … இதோ உன் தாய்!* (யோ 19:26,27)

பிள்ளைகளுக்கு இதோவொரு செய்தி!
கடைசிக் காலத்தின் அடையாளம் —

மல் 4:5,6 … *பிதாக்கள் … பிள்ளைகள் …*
2 தீமோ 3:1,2 … *பெற்றோருக்குக் கீழ்ப்படியாதோர்*

- நீங்கள் சொல்லுவதெல்லாம் பெற்றோருக்குப் புரியாவிடினும் அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் —

  லூக் 2:48-51 … பெற்றோருக்கு இயேசு கீழ்ப்படிந்திருந்தார்.

- முடிந்த வகையிலெல்லாம் பெற்றோருக்கு உதவுங்கள் —

  மாற் 6:3 … மரியாளுக்குக் குறைந்தது 7 பிள்ளைகள்.
  தச்சுப் பட்டறையில் இயேசு உதவினார்.

- வயதான காலத்தில் பெற்றோரைத் தாங்குங்கள் —

  எ.கா.) 1 தீமோ 5:16
  ஒரு நாள் நீங்களும் அவர்களைப் போலாவீர்கள்!

- வாக்குடன் தரப்பட்ட ஒரே கட்டளை —
  *தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு* (எபே 6:1-3)
- பத்துக் கட்டளைகளின் இரண்டாம் பகுதியில் முதல் கட்டளை —
  *தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு* (யாத் 20:12)

### *4. என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?* (மத் 24:46)

— சிலுவையிலிருந்து வந்த மையக் கதறல்!
— முழுவுலகின் பாவம் அவர்மீது வந்தபோது இவ்விதம் கதறினார்.

*அவர் நமக்காகப் பாவமானார்* (2 கொரி 5:21).
தமது முகத்தை மகனிடமிருந்து நொடிப்பொழுது பிதா மறைத்தார்.

இதையே *''இருட்டின் பயிற்சி''* என்கிறோம் —
ஏசா 50:10 ... *சொல் கேட்டு ... இருட்டு ... நம்பி ...*

ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து எடுத்துக்காட்டு —

| | | |
|---|---|---|
| வெளிப்பிரகாரம் | : | சூரியவொளி |
| உட்பிரகாரம் | : | விளக்கொளி |
| மகா பரிசுத்த தலம் | : | ஒளியே கிடையாது. |

இங்குதான் நாம்
*''தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டும்''*
( 2 கொரி 5:6)

தமது தந்தையை *''என் தேவனே''* என்றழைத்து
இயேசு இக்கேள்வி கேட்டார் — பின்னர் அவருக்கு அர்ப்பணித்தார்.

இது வேதனையின் குரல், கோபத்தின் குரல் அல்ல!

இங்கு ''தேவ'' குமாரனின் ''மானிடப்'' பக்கத்தைப் பார்க்கிறோம் —

இவ்வித வியாகுலம் மற்றும் தனிமையை அவர் அனுபவித்ததால்,
நமது இன்னல்களை அவர் நன்றாய்ப் புரிந்து,
தகுந்தாற்போல் நமக்கு உதவுகிறார் (எபி 2:17,18; 4:14-16)

கைவிடப்பட்டதுபோல் ''உணருகிறீர்களா?'' கைவிடப்படவில்லை!
*''நான் விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை''* (எபி 13:5)

தேவன் தம்மை மறைக்கலாம்; ஆனால் மறையமாட்டார்!



### *5. தாகமாயிருக்கிறேன்!* (யோ 19:28)

பாடங்களைக் கற்பிக்கவே தேவன் பாடுகளை அனுமதிக்கிறார் —

- ஒரு முக்கிய பாடம்: ''தனித்து அல்ல,
  சார்ந்து வாழவேண்டும்.''

  பிறரிடமிருந்து உதவி நாடத் தற்பெருமை மறுக்கிறது!
  பாடுகளின்போது தேவன் அதை உடைக்கிறார்.
  திருச்சபை என்பது திருவுடல்.
  எந்த உறுப்பும் தனித்தே இயங்கமுடியாது.

- இன்னொரு பாடம்:
  பாவியின் இடத்தைச் சிலுவையில் இயேசு எடுத்தார்.
  ஒவ்வொரு மனிதனின் தாகத்தையே இயேசுவின் தாகம்
  சுட்டிக்காட்டுகிறது —
  அத்தாகத்தைப் பணம் தீர்க்காது —
  எ.கா.) கடல் நீர்

  அத்தாகத்தைச் சிற்றின்பங்கள் தீர்க்காது —
  எ.கா.) சாலொமோன் (பிர 2:1-11,17)

மனிதனிலுள்ள வெற்றிடத்தைக் கிறிஸ்துவின் **சுவிசேஷம்**
மட்டுமே நிரப்ப முடியும் (இறுதியழைப்பு — வெளி 22:17)

எனவே, துரிதமாய்த் தூதறிவிப்போம்.
பசி தாகமுள்ள மனிதர்க்கு நாம் செய்வது கிறிஸ்துவுக்கே:
*''தாகமாயிருந்தேன்; தாகத்தைத் தீர்த்தீர்கள்!''*

### *6. முடிந்தது!* (யோ 19:30)

— இது வெற்றி முழக்கம்!
— மனுக்குல இரட்சிப்பிற்குப் பரிசுத்த தேவனது அத்தனை
நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டாயிற்று.
— இரட்சிப்புக்குச் சிலுவையோடு எதையும் கூட்டாதீர்,
அதிலிருந்து எதையும் குறைக்காதீர்.
நாம் எதையும் கூட்டிவிட முடியாது.
இரட்சிப்புக்கு விலைகொடுக்கவும் முடியாது;
அது ஓர் ஈவு (எபே 2:8,9)

''இதைச் செய்தேன், அதைச் செய்தேன்'' என்ற
பெருமைக்கிடமில்லை.
கிறிஸ்தவத்திற்கும் பிற மார்க்கங்களுக்குமுள்ள வேறுபாடு —
''செய்தாயிற்று!'' (Done!) vs. ''செய்யுங்கள்!'' (Do!)

கிறிஸ்தவம்: இரட்சிப்பிலிருந்து சுத்திகரிப்பு
பிற மார்க்கங்கள்: சுத்திகரிப்பின் மூலம் இரட்சிப்பு

மார்க்கச் சடங்குகள் நம்மை இரட்சிக்க முடியாது —

சபையில் அங்கம் வகிப்பது நம்மை இரட்சிக்காது.
ஞானஸ்நானம்/திடப்படுத்தல் நம்மை இரட்சிக்காது.
திருவிருந்து நம்மை இரட்சிக்காது.
காணிக்கை கொடுப்பது நம்மை இரட்சிக்காது.

கிறிஸ்து முடித்ததை விசுவாசிப்பதே நம்மை இரட்சிக்கும்!
இந்த **ஈவை** இன்றே பெற்றுக்கொள்ளமாட்டீர்களா?

### 7. *பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்!*

(லூக் 23:46)

முற்றும் ஒப்புக்கொடுத்தார்!
முற்றும் அர்ப்பணித்தார்!

சிலுவையில் முதலாம் வார்த்தை: ... *''பிதாவே ...''*
நான்காம், மைய வார்த்தை: ... *''என் தேவனே ...''*
ஏழாம், இறுதி வார்த்தை: ... *''பிதாவே ...''*

தேவனை மையப்படுத்திய வாழ்வு ... அல்பா, ஓமெகா.
தேவனையே சார்ந்திருக்கும் வாழ்வு.

பாதுகாப்பற்ற உலகில் வாழ்கிறோம்.
ஆனால் கீழ்க்கண்ட திருவசனங்களைப் பாருங்கள் —

*''நீங்கள் என் கையில் ... ஒருவனும் பறிக்க இயலாது''*
*''உங்கள் தலை மயிரையெல்லாம் எண்ணியிருக்கிறேன்''*
*''என் உள்ளங்கையில் உங்களை வரைந்திருக்கிறேன்''*
*''உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கிறது''*
*''நான் விசுவாசித்திருக்கிறவர் ... அவரிடம் ஒப்படைத்ததை ...''*

இயேசுவின் கரங்களில் பத்திரம்! (Safe in the arms of Jesus!)
இதுவெறும் கல்லறை வாசகமன்று!

''கருவறை (womb) முதல் கல்லறை (tomb) வரை''
நம்மையறிந்து பாதுகாப்பவர்!